DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 7/2016

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - மாதவன் | Father's Name - |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.07.2023.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**6,9,10,15 முதல் 19, 22 முதல் 26, 28,29 மற்றும் , 31 முதல் 34 பி.வா.கு.வி.:**

**தொடர்ச்சி**

கேள்வி : தொடப்பகவுண்டர் மகள் பாக்யம் எந்த வருடம் காலமானார்?

பதில் : 1955 ம் ஆண்டு

கேள்வி : பாக்யம் 1955 ஆம் ஆண்டு காலமானார் என்ற விபரத்தை நீங்கள் பிராதில் சொல்லியுள்ளீர்களா என்றால்?

பதில் : இல்லை.

கேள்வி : கொடி வழி ஜாபிதா நாகப்பகவுண்டருக்கு யார் யார் மகள்கள் என்றால் ?

பதில் : பூச்சி என்ற மாரியம்மாள், மூக்காயி என்ற முத்துமாரியம்மாள்

கேள்வி : பூச்சி என்ற மாரியம்மாள் இல்லை என்றாலும், பூச்சி என்ற மாரியம்மாளுக்கு மூக்காயி என்ற முத்துமாரியம்மாள் பெயர் உண்டு என்றால்?

பதில் : தவறு.

கேள்வி : மூக்காயி என்பவரை பாக்யம் அவர்களின் கணவர் சங்கரலிங்க கவுணடருக்கு 2 வது மனைவியாக திருமணம் செய்யபட்டார் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : சங்கரலிங்க கவுண்டருக்கும் மூக்காயிக்கும் தான் பிறந்தவர் மதுசூதனன் என்றால் ?

பதில் : தவறு.

கேள்வி : உங்களுடைய வாக்குமூலத்தில் இந்த பிரதிவாதிகள் மீது நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த வழக்கு நில அபகரிப்பு நீதிமன்றத்தில் சிசி எண் 4/2015 என நம்பராகி உள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அதில் நீங்கள் தான் அ.சா1 புகார்தாரர் ஆக விசாரணை செய்யபட்டுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த வழக்கில் நீங்கள் குறுக்கு விசாரணை செய்யபட்டீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுடைய முப்பாடனார் என்று சொல்லக்கூடிய தொட்டப்பகவுணடர் எந்த வருடம் இறந்தார் என்ற கேள்விக்கு தெரியாது என்ற பதில் சொல்லியுள்ளீர்களா என்றால் ?

பதில் : சொல்லியுள்ளேன்.

கேள்வி : அந்த குறுக்கு விசாரணையில் தொட்ப்பகவுணடரின் மகள் பாக்யம் 1990 ம் ஆண்டு காலமாகிவிட்டது என்று சொல்லியுள்ளீர்களா என்றால்?

பதில் : ஞாபகமில்லை

கேள்வி : தொட்டப்பகவுண்டரின் இறப்பு , பாக்யம் அவர்களின் இறப்பு வருடங்களை பின் யோசனையுடன் இந்த வழக்கிற்காக பொய்யாகவும் , தவறாகவும் இந்த வழக்கிற்காக சொல்லியுள்ளீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.07.2023 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN
Digitally signed by S GOPINATHAN
Date: 2023.07.10 16:49:44 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
07.07.2023.